**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# CC.NO-13/2021

**Dated :20.01.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW5 Examined as PW.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | வயது | : | 41 |
| தந்தை பெயர் | : | **துரைராஜ்** | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | கருப்புடையான்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1முதல் 4 எதிரிகள் ஆஜர்.)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 31.03.2021 ஆம் தேதி, காலை சுமார் 06.30 மணியளவில், நானும் மாரிமுத்து மகன் சங்கர் என்பவரும் பன்னிரெண்டாம்பட்டி கிராமத்திற்கு சொந்த வேலையாக சென்றிருந்தோம். நாங்கள் ரமேஷ் என்பவரின் வீட்டின் அருகே சென்று கொண்டிருந்த போது, ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அங்கு சண்டை நடந்தது சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்தார். அதற்காக எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் 31.03.2021 ஆம் தேதி காலை 06.10 மணியளவில் நான் CC 64/2024 என்ற வழக்கில் சம்பவ இடத்தில் இருந்து சாட்சிக்கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் அதே சம்பவ இடத்தில் காலை 06.30 மணிக்கு இருந்ததாக இந்த வழக்கில் சாட்சியம் அளித்தேன்

என்றால் சரிதான். எனது முதல் விசாரணை சாட்சியத்தின் படி 31.03.2021 ஆம் தேதி, நான் சம்பவ இடத்தில் இரண்டு முறை இருந்ததாக சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். இரண்டு முறையும் வெவ்வேறு காவல் அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, ஒரே காவல் அதிகாரி தான் விசாரித்தார். என்னை இரண்டு முறை விசாரித்தாரா என்றால் சரிதான்.

2) காலை 06.10 மணியில் இருந்து காலை 06.30 மணி வரை நான் சம்பவ இடத்தில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் தான் அரை மணி நேரம் நின்றேன் என்றாலும் நான் வேலைக்கு ஆட்கள் கூப்பிடுவதற்காக பன்னிரெண்டாம்பட்டி கிராமத்திற்கு சென்ற போது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது ஊரில் இருந்து பன்னிரெண்டாம்பட்டி கிராமத்திற்கு சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். இவ்வழக்கின் புகார்தாரர் ரமேஷ் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு அண்ணன் உறவுமுறை ஆவார்.

3) பார்வை மகஜரில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரிதான். அதனை யார் எழுதினார்கள், என்ன பெயர் கொண்ட அதிகாரி எழுதினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதி, மாதம், வருடம் என்ன பெயர் கொண்ட அதிகாரி என்னை விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் அதிகாரி பெயரை குறிப்பிட்டு சொல்லமுடியாது, 31.03.2021 ஆம் தேதி விசாரித்தார்கள்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**